O.S.No. 33/2022 நாள் 15.07.2025 PW 1 – திருமதி. மல்லிகா

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை (1, 5 பிரதிவாதிகள்தரப்பில்)

இந்த வழக்கில் 7ம் பிரதிவாதி சந்திரபுஷ்பம் இடைஞ்சல் செய்ததற்காக மட்டும் கட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் அவர்கள் எங்கள் சொத்தை கிரையம் வாங்கியுள்ளதால் கட்சியாக சேர்த்துள்ளோம். 7ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய ஆவணம் செல்லாது என்று வழக்கில் பரிகாரம் கேட்கவில்லை என்றால் அந்த ஆவணம் பற்றி எனக்கு தெரியாததால் கேட்கவில்லை. என் அண்ணன் நாராயண நாடார் 7ம் பிதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில் எனது சகோதரியான 6ம் பிரதிவாதி கிருஷ்ணவடிவு சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. எனது சகோதரியான 6ம் பிரதிவாதி கிருஷ்ணவடிவு சாட்சியாக கையொப்பம் செய்தது எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது சகோதரி 6ம் பிரதிவாதி போட்ட பதிலை படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தபசில் சொத்துக்கள் கிரையம் செய்த விவரம் எல்லாம் 1991 ஆம் ஆண்டே தெரியும் என்றும், அதனை மறைத்துதான் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை முடிக்கப்படுகிறது.